தினமலர்



# வேல்ஸ் பல்கலை பட்டமளிப்பு விழா

## இணைய வழியில் மத்திய அமைச்சர் பங்கேற்பு

**பல்லாவரம், ஜன. 12–**

''ஒவ்வொருவரும் உடற் பயிற்சியில் கவனம் செலுத்த வேண்டும்,'' என, வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராயச்சி நிறுவன பட்டமளிப்பு விழாவில், மத்திய அமைச்சர் அனுராக் தாகூர் தெரிவித்தார்.

சென்னை, பல்லாவரம் வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவன 11வது பட்டமளிப்பு விழா நேற்று நடந்த்து. வேல்ஸ் நிறுவன வேந்தர் ஐசரி கே.கணேஷ் தலைமை வகித்தார்.

மத்திய தகவல் ஒலி பரப்புத்துறை அமைச்சர் அனுராக் தாகூர் இணைய வழியில் பங்கேற்று பேசியதாவது:

பட்டம் பெறும் மாணவர்களுக்கு வாழ்த்துக்கள். உங்களை சிறந்த மாணவர்களாக உருவாக்கிய ஆசிரியர்களை நினைத்துப் பார்க்க வேண்டும்.

ஒவ்வொருவரும், உடல் ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்த வேண்டும். தற்போதுள்ள




■ வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவன 11வது பட்டமளிப்பு விழா நேற்று நடந்தது. இதில் வி.ஜி.பி., குழும நிறுவனங்களின் தலைவர் வி.ஜி. சந்தோஷம், நடிகர் சிம்பு மற்றும் விளையாட்டு வீரர் மாரியப்பன் ஆகியோருக்கு கவுரவ டாக்டர் பட்டங்களை, பல்கலை வேந்தர் ஐசரி கணேஷ் வழங்கினார். இடமிருந்து வலம்: வேல்ஸ் பல்கலை இணைவேந்தர்கள் பேராசிரியர் ஜோதி முருகன், டாக்டர் ஆர்த்தி கணேஷ், வேல்ஸ் நிறுவன துணை தலைவர் ப்ரீதா கணேஷ் உள்ளனர். இடம்: பல்லாவரம்.

பிரச்னை அனைவருக்கும் தெரியும். அதனால், உடற் பயிற்சி செய்து ஆரோக்கியமாக இருக்க வேண்டும். உடற் பயிற்சியை அன்றாட வாழ்வில் ஒரு அங்கமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு, அவர் பேசினார்.

விழாவில், வி.ஜி.பி., குழும நிறுவனங்களின் தலைவர் சந்தோசம், நடிகர் சிம்பு, விளையாட்டு வீரர் மாரியப்பன் ஆகியோருக்கு, கவுரவ டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது.

மொத்தம் 4,069 மாணவ – மாணவியருக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன. இதில், 2,000 பேர் விழாவில் பங்கேற்றனர். மற்றவர்கள் இணையவழி மூலம் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

வேல்ஸ் பல்கலை இணை வேந்தர்கள் ஜோதிமுருகன், ஆர்த்தி, வேல்ஸ் குழும நிறுவனங்களின் துணைத் தலைவர் ப்ரீதா கணேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.